Reg. No. M. 2997.

361

தனிப்பிரதி அணா 1

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை
ச. கந்தையபிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

# VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

# வித்தகம்

வியாழக்கிழமைதோறும் வெளிவருவது

Bureau de la Direction:—
RUE D'AMBALATADOU AYER
MADAM NO. 4, Pondichery.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. குறள்.

காரியாலயம்:—
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி,
நெ. 4, புதுவை.

VOL I. { புதுவை, பவ-ஹூ புரட்டாசி-மீ ௨௪ ௨ (11—10—31) } No. 46.

## திருமந்திரம்

உண்ணு மருந்து மூலப்பிலி காலமும்
பண்ணுறு கேள்வியும் பாடலு மாய்நிற்கும்
விண்ணின் றமரர் விரும்பி யடிதொழ
வெண்ணின் றெழுத்தஞ்சு மாகிநின் றானே.

ஐந்தின் பெருமை யகலிட மாவது
வைந்தின் பெருமையே யாலய மாவது
வைந்தின் பெருமை யறவோன் வழக்கமு
மைந்தின் வகைசெயப் பாலனு மாமே.

நாலா மெழுத்தோசை ஞால முருவது
நாலா மெழுத்தினுண் ஞால மடங்கிற்று
நாலா மெழுத்தே நவிலவல் லார்கட்கு
நாலா மெழுத்தது நன்னெறி தானே.

அஞ்சுக வஞ்செழுத் துண்மை யறிந்தபி
னெஞ்சகத் துள்ளே நிறையும் பராபரம்
வஞ்சக மில்லை மனைக்கு மழிவில்லை
தஞ்ச மிதுவொன்று சாற்றுகின் றேனே.

எய்தி வழிப்படி லெய்தா தனவில்லை
யெய்தி வழிப்படி லிந்திரன் செல்வமு
னெய்தி வழிப்படி லெண்சித்தி யுண்டாகு
மெய்தி வழிப்படி லெய்திடு முத்தியே.

அறிவரு ஞானத் தெவரு மறியார்
பொறிவழி தேடிப் புலம்புகின் றார்க
ணெறிமனை யுள்ளே நிலைபெற நோக்கி
லெறிமணி யுள்ளே யிருக்கலு மாமே.

உ

திருவருள் துணை

ம
நந்திபதி
கோல்

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.

(திருவாசகம்.)

# வித்தகம்

புதுவை,
பவ-ஹு புரட்டாசி-மீ 26உ

## பதி பசு பாச உண்மை

வேதம் ஆகமம் முதலிய நூல்களெல்லாம் பதி பசு பாசங்களின் இயல்புகளையே பல்லாற்றானும் விளக்கமுற உரைக்கின்றன. இவற்றின் இயல்புகளை அறிவதே வேண்டிய கல்வியும் ஆம். இத்தகைய கல்வியுள் யாவும் அடங்குதல் பற்றியே

"வேண்டிய கல்வி ஆண்டு மூன்று இக
[வாது"

என விதந்து கூறினர் தொல்காப்பியரும். வாய்மையான கல்வி கேள்விகளாற்றான் பதி பசு பாச இயல்புகள் அநுபவமாக அறியப்படும். இங்கே கல்வி என்றது ஏடுகளில் உள்ள செய்யுட்களையோ வாக்கியங்களையோ வாளா படித்தலன்று. கேள்வி என்பது சாத்திரங்கள் என வழங்கும் சில பல நூல்களைப் பிறரிடம் கேட்டு அறிதலன்று. வாய்மையான கல்வி கேள்விகள் வாய்மையான குரவன் அருளால் பெறற்பாலன. அவற்றின் இயல்பு அமயம் நேர்ந்துழி ஒருவாறு விளக்கிக் கூறப்படும். பதி பசு பாச இயல்புகள் அநுபவ வாயிலா னன்றிப் பிறவாறு பூரணமாக அறிதல் கைகூடாது எனினும், ஈண்டு ஒரு சிறிது தூலமாக உரைக்கப்படுகின்றன.

வியாபகமாய் காரியத்தில் காரியமாய் முன்னிலையில் காணப்படும் அண்ட பிண்ட சராசரங்கள் யாவும் தோன்றி நின்று திரியும் தன்மை உடையனவாதலின் மாயா சொரூபம் எனப்படும். இந்த மாயையே சத்தியமாகிய பிரமத்தின் ஆதித் தோற்றமாய் உள்ளது. இதற்கு அடிப்படையில் உள்ள சத்தியமே வியாப்பியம் எனப்படுவது. வியாப்பியமாகிய காரணத்தினின்றும் நிறை பிரிந்து வியாபகம் பெற்றனவே அண்ட பிண்டங்களாகி விளங்கும் அகில சராசரங்களும் ஆம். வியாப்பியமே இடம். வியாபகமே பொருள். வியாப்பியம், நிலைக்களம், இடம் என்பன ஒன்றே. இதுவே பதி எனப்படுவது. பதி- இடம், தேசம் எனப்பொருள்படும். வியாப்பியம் பதி ஆக வியாபகமே பசு பாசம் இரண்டையும் உடையதுஎன்க. வியாபகமாகிய மாயையானது நிறை பேதத்தால் வியாப்பியத்தில் நின்றும் விண்டதாதலின் அத்தகைய நிறை பேதமாகிய விஷமம் (ஏற்றிழிவு, ஏற்றம் இறக்கம்) உடையது—பங்கம் உடையது—குற்றம் உடையது எனப்படும். இக்குற்றமே அழுக்கு-மலம்—பாசம் எனப்படுவது. இத்தகைய பாச சம்பந்தமுடையதே பசு எனப்படுவது. இவ்வாறு இயற்கை முறையான் அமைந்து பதி பசு பாசம் என மூன்றாகப் பேசப்படும் வியாப்பிய வியாபகங்கள் என்றும் உள்ளனவே—அநாதியே என அறிதல்வேண்டும். இவை அநாதியாய் உள்ளன என்றே வேதாகமபுராண இதிகாசங்கள் முறையிடுவனவாகும். பதி எப்பொழுது உண்டோ பசு பாசங்களும் அப்பொழுதே உள்ளன. ஒளி எப்பொழுது உண்டோ இருளும் அப்பொழுதே உள்ளது. சத்தியமாகிய மெய் எப்பொழுது உண்டோ அசத்தியமாகிய பொய்யும் அப்பொழுதே உள்ளது. பிரமம் எப்பொழுது உண்டோ மாயையும் அப்பொழுதே உள்ளது. இயற்கை முறை இதுவே என்க. வியாப்பிய வியாபகங்களுக்கு முற்பிற்பாடு மொழிதல் முடியாது. மாயையே கற்பனை—போலி எனப்படுவது. போலி இல்லாவிடின் உண்மையை அறிய முடியாது; உண்மை ஒன்று உளது என்னும் உணர்ச்சியே தோன்றாது. உண்மை காணப்பட்ட இடத்துப் போலி மறைந்துவிடும். உண்மை காணப்படாதவரை போலியே உண்மை எனத் தோன்றும்.

வியாப்பியமாகிய பதி அசைவற்றது; விகாரமற்றது; சச்சிதானந்த வடிவாய் உள்ளது; அருவமான அமல ஒளி வடிவாய் உள்ளது; சத்தி சிவ வடிவாய்—நாதவிந்து வடிவாய் யாவும் தோன்றி ஒடுங்குதற்குரிய நிலைக்களமாய் உள்ளது என்க. இதன்கண் வியாபரிக்கும் சத்தியின் ஸ்புரணத்தினால்—ஆனந்த லீலையால் அசைவு நிறை பேதம் உளதாயிற்று. இச்சத்தியே ஞானாகாசம் — சுத்தவெளி எனப்படுவது. இதுவே பஞ்சகார வடிவம்—பஞ்சபூத வடிவம்; இதுவே அமல ஐகாரம் எனப்படுவது; எம்பெருமான் திருவடி எனப்படுவது. "கால் அந்தச் சத்தி" என்பது திருமந்திரம் (அடிதலை அறியும் திறம் கூறல் செ. 1.) இதிலிருந்து நிறை பேதித்த பஞ்ச பூதங்கள் பலவகையான விகாரமும் அடைதலால்—பஞ்சீகரண பேதம் அடைதலால் அகிலம் தோன்றியது—பசு பாசங்கள் தோன்றியன என்க.

## அகப்பை சித்தர் பாடல்

பராபரமானதடி அகப்பேய்
பறையாக வந்ததடி
தராதல மேழ் புவியும் அகப்பேய்
தானே படைத்த தடி.

நாத வேதமடி அகப்பேய்
நன்னடங் கண்டாயோ
பாதம் சத்தியடி அகப்பேய்
பரவிந்து நாதமடி.

விந்து நாதமடி அகப்பேய்
மெய்யாக வந்ததடி
ஐந்து பெரும் பூதம் அகப்பேய்
அதனிட மானதடி.

என்றனர் தத்துவப் பெரியாராகிய சித்து மூர்த்தி ஒருவர். பஞ்சபூதங்களாகிய பஞ்சகாரங்களில் ஒவ்வொரு காரம் இன்ன இன்ன நிறை எனப் பிரிந்து வியாபகம் பெற்றதே—வியாபகம் எனும் பங்கமடைந்ததே ஆன்ம வியாபகம் ஆம். இதுதான் பசு எனப்படுவது. இது காரியம். இக் காரியத்தில் நின்று விரிந்ததே—வியாபித்ததே காரியத்தில் காரியமாகிய தூலச்சிவை. இதுதான் பாசம் எனப்படுவது. சத்துச் சித்தாய் சத்தி சிவமாய் அர்த்த நார ஒலியாய்—அமல ஐகார ஒலியாய் விளங்குவது அப்பன் திருவடிக் கமலம். நாத வேதம் எனப்படுவதும் இதுவே. சத்தில்லாமல் சித்தில்லை; சித்தில்லாமல் சத்தில்லை. சிவமில்லாமல் சத்தியில்லை; சத்தியில்லாமல் சிவமில்லை. மெய்யில்லாமல் உயிரில்லை. உயிரில்லாமல் மெய் இல்லை. நிறை பிரிந்து வியாபகம் பெற்றுச் சத்துச்சித்தாய் விளங்கும் பௌதிகங்கள் இன்ன இன்ன நிறையோடு பொலிந்தால் உடல் உயிர் என அமையும் என்ப. இயற்கை முறை இதுவே. இதனைச் சீவர்களாகிய மித்தை ஆன்மாக்கள் அறிதல் முடியாத காரியம். இவ்வாறு நிறை பிரிந்து வியாபகம் பெற்ற—அகலிடம் புக்க பசு பாசங்களாகிய ஆன்ம நிறையில், அமல நிறையாகிய பதியானது அச்சீவர்கள் தன்னிடம் திரும்புதற்குரிய—புகலிடம் புகுதற்குரிய நிறையாகிய வேதம் என்னும் ஒலிவடிவாய்த் தானும் வியாபித்து ஓவாது கூவிக்கொண்டு—ஒலித்துக்கொண்டு இருக்கின்றது, அநவரத தாண்டவம் புரிகின்றது. "நறுமலர் எழுதரு நாற்றம்போல்" உணர்ச்சி வடிவாய் "உற்ற ஆக்கையின் உறு பொருள்" ஆய் "பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்" ஆய் நிற்கும் சிவம் என்னும் செம்பொருள் இதுவே என அறிக. இரண்டு அன்னங்கள் தோழர்களாய்க் கூடிக்கொண்டு பின்னமின்றி ஒரே விருட்சத்தில் இருக்கின்றன என்னும் உபநிடச் சுருதியின் உண்மையும் இதுவே என அறிதற் பாற்று. ("வித்தகம்" இல, 32. பக்கம், 4. இல் "யோகம்" என்னும் கட்டுரை பார்க்க). இதனால் முன்னிலையாகி விளங்கும் சராசரங்கள் எல்லாம் பதி பசு பாச வடிவங்களே என்பதும் இவை என்றும் உள்ளனவே என்பதும் நன்று பெறப்படுதல் கண்டு கொள்க. நிறை பிரிந்ததனால் பங்கமடைந்து வியாபகம் பெற்ற அசுத்த நிறையாகிய ஆன்ம நிறையானது—சீவனானது (உடலுயிர்) முன்னிலையாகிய மாயா காரியங்களை நிறை கண்டு பஞ்சீகரணித்தலால் பந்தம் நீங்கி—அமலமடைந்து வியாப்பியமாகிய பதியை அடைவதே—சிவாங்கமாவதே ஒடுக்கம் என்பது—முத்தி என்பது. தோன்றிய முறையே ஒடுக்கம் என்னும் வேத உண்மை இதுவே என்க. பாச சம்பந்தத்தாலாய குருட்டுப் பார்வையால் சீவராகிய நமக்கு மாயா காரியமாய்த் தோன்றும் இப் பிரபஞ்சம் பிரம சொரூபம் என்றே சுருதிகள் முழங்குகின்றன. முன்னிலையாய் விளங்கும் பிரமத்தை வாய்மையாகப் பூசித்தவர்க்கு — வழிபட்டவர்க்கு அஃதாவது அதனை நிறைகண்டு பஞ்சீகரணித்து உறவு படுத்தியவருக்குத் தன்னிலை முன்னிலைகள் ஒன்றுதலால் யாவும் பிரமமாகவே அமையும். மேலே கூறிய உண்மைகளை நன்று புலப்படுத்தும் பிரமாணங்கள் மிகப் பலவாகும். அவற்றுள்ளே சில இங்கே காட்டப்படுகின்றன.

## முண்டக உபநிஷத்

"ததேதத் ஸத்யம் யதா ஸுதீப்தாத்
பாவகாத் விஸ்புலிங்கா: ஸஹஸ்ரச
ப்பவந்தே ஸரூபா:| ததா க்ஷராத்
விவிதா: ஸௌம்ய பாவா: ப்ர
ஜாயந்தே தத்ர சைவாபியந்தி||"

(இ-ள்) ஓ சௌமியா! அது சத்தியம். கொழுந்து விட்டு எரிகிற அக்கினியினின்றும் அதன் வடிவமாய் அநேகபொறிகள் உண்டாவதுபோல, நித்திய வஸ்துவாகிய பிரமத்தினின்றும் பலவகையான தேகத்தை உபாதியாகவுடைய ஜீவாத்மாக்கள் உளவாகின்றன; அதனிடத்தே ஒடுங்குகின்றன என்பதாம்.

## யோகசிகோபநிஷத்

உபாதானம் ப்ரபஞ்சஸ்ய ப்ரஹ்
[மணோந்ய ந்நவித்யதே |
தஸ்மாத் ஸர்வ ப்ரபஞ் சோயம்
ப்ரஹ்மைவ வாஸ்தி நசேதரத்||

(இ-ள்) பிரபஞ்சத்துக்கு உபாதான காரணம் பிரமத்தைத் தவிர வேறு இல்லை. ஆதலால் இப்பிரபஞ்ச முழுவதும் பிரமமாகவே இருக்கிறது. பிறிதொன்றாக இல்லை என்பதாம்.

## ஆத்மபோதம்

உபாதானே கிலாதாரே ஜகந்தி
[பரமேச்வரே|
ஸர்வ ஸ்திதி லயாந் யாந்தி
[புத்புதா நிவவாரிணீ ||

(இ-ள்) நீரினிடத்தே நீர்க்குமிழி தோன்றி நின்று ஒடுங்குதல் போலவே பரமேசுவரனிடத்திலே உலகங்களும் தோன்றி நின்று ஒடுங்குகின்றன என்பதாம்.

ஸச் சிதாத் மந்யநு ஸ்யூதே நித்யே
[விஷ்ணௌ ப்ரகல்பிதா:|
விவக்தயோ விவிதாஸ்ஸர்வா
[ஹாடகே கடகாதி வத் ||

(இ-ள்) பொன்னினிடத்தே பல வகையாகக் கற்பிக்கப்பட்ட ஆபரண முதலியன அப்பொன்னினும் வேறாகாது இருத்தல் போல, சத்துச்

சித்து வடிவாகிய பரமாத்மாவினிடத்தே கற்பிக்கப்பட்ட சராசரங்களும் அதனிலும் வேறாகாது இருக்கும் என்பதாம்.

## மகோபநிஷத்

ஸமஸ்தம் கல்பிதம் ப்ரஹ்ம ஸர்வ
[மாத் மேத மாததம் |
அஹமந்ய மிதம் சாந்யதிதிப்ராந்திம்
[த்ய ஜாநக ||"

(இ—ள்) இந்தச் சகல பிரபஞ்சமும் பிரமமே. வியாபகமான இந்தப் பிரபஞ்சம் எல்லாம் ஆன்மாவே. ஓ! பாபமற்றவனே! நான் வேறு இந்தப் பிரபஞ்சம் வேறு என்னும் பிராந்தியை ஒழித்து விடு என்பதாம்.

உபநிடதங்களெல்லாம் இவ்வுண்மையையே கூறுவனவாகும். மேலும் எடுத்துக்காட்டின் மிக விரியும்.

## திருவாசகம்

"..........................................
ஒருவ னென்னு மொருவன் காண்க
விரிபொழின் முழுதாய் விரிந்தோன்
[காண்க
..........................................
மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க
பந்தமும் வீடும் படைப்போன் காண்க
.........................................."

(ஷை—திருவண்டப் பகுதி)

ஒன்றாய் முளைத்தெழுந் தெத்தனையோ
[கவடுவிட்டு
நன்றாக வைத்தென்னை நாய்சிவிகை
[யேற்றுவித்த
என்றாதை தாதைக்கும் எம்மனைக்குந் தம்
[பெருமான்
குன்றாத செல்வற்கே சென்றூதாய் கோத்
[தும்பீ.

(ஷை திருக்கோத்தும்பி செ. 8.)

நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பக
[லோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப்
[புணர்ந்து நின்றான்
உலகேழெனத்திசை பத்தெனத்தா னொரு
[வனுமே
பலவாகி நின்றவா தோணோக்க மாடா
[மோ

(ஷை திருத்தோணோக்கம் செ. 5)

நீக்கி முன்னெனைத் தன்னோடு நிலா
[வகை குரம்பையிற் புகப்பெய்து
..........................................
தூக்கி முன்செய்த பொய்யறத் துகளறுத்
[தெழுதரு சுடர்சோதி
ஆக்கி .........................................."

(ஷை அதிசயப்பத்து செ. 8.)

## சிவவாக்கியர்

ஆதியான தோன்றமே யநேகநேகரூப
[மாய்ச்
சாதிபேத மாயெழுந்து சர்வசீவனானபின்
ஆதியோடு கூடிமீண் டெழுந்து சென்ம
[மானபின்
சோதியான ஞானியாருஞ் சுத்தமா யிருப்
[பரே.

## திருமந்திரம்

பதிபசு பாச மெனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம நாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசநில் லாவே.

(ஷை 1—ம் தந். உபதேசம். செ. 3)

[வியாப்பியமாகிய பதி விகாரமின்றித் தன்னிலையில் நிற்பதாதலின் "பதியினைச்சென்றணுகா பசு பாசம்" எனப்பட்டது. "உற்ற ஆக்கையின் உறுபொருள்" ஆகிய சிவம் பசு பாசமாகிய உடலில் பூரணமாகக் குடிபுகுங்கால் சீவத்துவம் நீங்கிச் சிவத்துவம் திகழு மாதலின் "பதி அணுகில் பசு பாசம் நில்லாவே" எனப்பட்டது.]

## திருமந்திரம்

பசுப்பல கோடி பிரமன் முதலாய்ப்
பசுக்களைக் கட்டிய பாசமூன் றுண்டு
பசுத்தன்மை நீங்கியப் பாச மறுத்தாற்
பசுக்க டலைவனைப் பற்றி விடாவே.
(ஷை 8-ம் தந். பதி பசு பாச வேறின்மை
செ. 2)

[பாசம் மூன்று—ஆணவம் கன்மம் மாயை. என்ப. சத்துச் சித்தாகிய உடலுயிர் பஞ்சீகரண பேதத்தால்—விஷமத்தால் (நிறைபேதம்) நான் என்னும் அழுக்க (தூரு) மலியப் பெற்றதே ஆணவம் எனப்படுவது. இதனால் உளவாகும் அசைவு என்னும் இயக்கமே — வினையே கர்மம் எனப்படுவது. பிரபஞ்சத்தைப்பிரம சொரூபம் எனக் காணாது அழுக்கு மனத்தாலான குருட்டுப் பார்வையால் அதனை மயக்கம் தரும் பொருளாகக்கண்டு அதன்பால் ஈடுபட்டு அவதியுறும் பெற்றியே மாயா சம்பந்தம் என்பது. "பல கோடி" என்பது அளவின்மை குறித்து நின்றது. அநாதியாகவே நிறை பிரிந்து வியாபகமாய்ச் சராசர வடிவாய் நிற்கும் ஆன்மாக்களுக்கு அளவில்லை. இன்னும் மருளில் வாராது இருளில் இருப்பனவே அளவற்றன என்றால், அகண்டாகார அருட்பெருஞ் சோதியின் அம்சங்களாகித் திகழும் ஜீவகோடிகளை யாரால் அளவிடமுடியும்? வியாப்பிய வியாபகங்கள் அநாதியாகவே உள்ளனவாதலின் இன்ன காலத்திற்றான் ஜீவர்கள் நிறை பிரிந்து வியாபகமாயின என்று கூறுதல் முடியாது. இவற்றுள் எத்துணையோ கோடியுள் ஒன்றுதானும் புகலிடம் புகுந்து ஒடுங்குவது—வியாப்பியத்தை அடைவது அரிதினும் அரிதாகும். பலகோடி சென்ம நற்றவப் பயனால் பக்குவம் பெற்று உண்மை நிலை அடைந்த அம்சங்கள் இம்மாயாப் பிரபஞ்சமாகிய வியாபகத்தில் மீண்டு வருதல் இல்லை. ஏன்? அவை தம் அநாதியான வியாபக நிலையைக் கடந்து வியாப்பியத்தை அடைந்தனவாதலின் என்க. விகார மின்றித் தன்னிலையில் நிற்கும் வியாப்பியமாகிய பதியை அடைந்த சீவன் முத்தர் மீண்டு வருதல் இல்லை என்பது "பிரமலோகத்தில் இருந்து மீண்டு வருதல் இல்லை; புநராவர்த்தி இல்லை" எனச் சாந்தோக்கிய சுருதி (8. 15. 1) வற்புறுத்துதலானும் அறியப்படும். இது பற்றியே "பசுத்தன்மை நீங்கி அப்பாசம் அகன்றால், பசுக்கள் தலைவனைப் பற்றிவிடாவே" என்று கூறப்பட்டது.]

## திருமந்திரம்

சத்தி சிவன்விளை யாட்டா லுயிராக்கி
யொத்த விருமாயா கூட்டத்திடை பூட்டிச்
சுத்தம தாகுந் துரியம் பிரிவித்துச்
சித்தம் புகுந்து சிவமயமாக்குமே.
(ஷை-2ம் தந். மூவகைச் சீவ வர்க்கம்
செ. 1)

சத்தி சிவன்றன் விளையாட்டுத் தாரணி
சத்தி சிவமாஞ் சிவஞ்சத்தி யுமாகுஞ்
சத்தி சிவமன்றித் தாபரம் வேறில்லை.
சத்தி தானென்றுஞ் சமைந்துரு வாகுமே

(ஷை–7–ம் தந். ஞானலிங்கம் செ. 10).

சீவ னென்னச்சிவ னென்ன வேறில்லை
சீவ னார்சிவ னாரை யறிகிலர்
சீவ னார்சிவ னாரை யறிந்தபின்
சீவ னார்சிவ னாயிட் டிருப்பரே.

(ஷை 7-ம் தந். ஆதித்த நிலை. செ. 13.)

[சுத்தமதாகும் துரியம் — நின்மல துரியம். சீவர் வியாபகமாகிய அகலிடத்துநிற்போராதலின் புகலிடமாகிய வியாப்பியத்து அமைந்த பதியை அறியமாட்டார். ஆதலால் "சீவனார் சிவனாரை அறிந்திலர்" எனப்பட்டது. சிவசத்தி லீலையே பிரபஞ்சம் அஃதாவது சத்தியே பிரபஞ்சமாகி விரிந்து விரிந்து நிற்பது என்பதும், சத்தி சிவமயமாகிய நாதவிந்து மயமே உடலுயிர் (உலகம்) என்பதும் பசு என்பது பதியின் வேறானதன்று என்பதும் இவற்றால் நன்கு பெறப்படும். வேறு வேறாக இரண்டு பொருள் அநாதியாய் இருத்தல் இயற்கை விரோதமாதலால் பசு பதியின் வேறன்று என்பது வெள்ளிடையாம்! இவ்வுண்மையையே "ஏகம் ஏவ அத்துவிதீயம்" என்னும் மறை மொழியால் சுருதியும் வற்புறுத்துவதாயிற்று என அறிதல் வேண்டும். "ஜீவனே சிவன். சிவனே ஜீவன். அந்த ஜீவன் சிவனே தான்" என யசுர்வேத ஸ்கந்தோபநிஷத் வற்புறுத்தியதும் அறிக.

## திருமந்திரம்

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே.

பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணந்
தன்னை மறைத்தது தன்கர ணங்களாந்
தன்னின் மறைந்தது தன்கர ணங்களே.

(ஷை 8-ம் தந். அவத்தைபேதம் செ. 149, 148.)

[மரத்தினால் செய்யப்பட்ட யானை வடிவம் வெளித்தோற்றத்தால் யானை போலக் காணப்படினும் உண்மையில் அது மரமே யன்றி யானையன்று. காரணமும் காரியமும் ஒன்றே. சிறு குழவிகள் மரயானையை முதலில் உண்மையான யானை எனவே நினைந்து அஞ்சி அழுங்குவார்கள். பின்பு பிறர் வாயிலாக அதன் பால் அணுகி அதனைத் தீண்டிப் பயின்று அச்சம் நீங்கி உண்மை கண்டு மகிழ்வார்கள். மரம் என்று உண்மையை நோக்கும் போது யானை உருவம் தோன்றாது அதனுள் மறைந்து விடும். யானை உருவமாகிய போலியையே காணும் போது மரம் என்னும் உண்மை வடிவம் தோன்றாது அதனுள் மறைந்து விடும். இவ்வாறே பிரமத்தில் கற்பிக்கப்பட்ட பிரபஞ்சமாகிய போலியையே வாய்மை எனநோக்கும்போது பிரமம் தோன்றாது அதனுள் மறைந்து விடும் பிரமத்தைக் காணும் போது பிரபஞ்சமும் தோன்றாது அதனுள் மறைந்துவிடும்.

"பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்"

என்பதன் பொருளும் இதுவே யாம். யானையும் பணியுமாகிய கற்பனைகளை நோக்குமிடத்து மரமும் பொன்னுமாகிய வாய்மை தோன்றாது அவற்றுள் மறைந்து நிற்பினும் காரியமும் காரணமுமாய் அமைந்த யானையும் மரமும பணியும் பொன்னும் பொருளால் ஒன்றே என்பது வெள்ளிடைமலையாம். ஆகவே உணர்ச்சி பேதமேயன்றிப் பொருட்பேதம் இல்லை என்பது சத்தியமாகும். இவ்வாறே எம்போலிய சீவர்களாகிய சிறு குழவிகளுக்குக் கோரணி வடிவமாய் அச்சம் விளைக்கும் கற்பனையாகிய பிரபஞ்சம் சீவன் முத்தராகிய பெரியார்க்குப் பரமானந்த சுகமளிக்கும் பிரமசொரூபமேயாய் தன் உண்மை வடிவோடு திகழும் என்பது தடக்கை நெல்லி என விளக்கம் பெறுதல் கண்டு கொள்க. இதனால் காரியமாய் வியாபகமாய் விளங்கும் பசு பாசங்கள் காரணமாய் வியாப்பியமாய் நிற்கும் பதியின் வேறன்மை பசு மரத்தாணி போல் நன்று வலியுறுகின்றது. மயக்கவுணர்வுடைய — குருட்டுப்பார்வையுடைய சீவராகிய நாம் கோரணி வடிவமான போலியையே உண்மை எனக் கண்டு இடருறுகின்றோம். உண்மை வடிவமாகிய பிரமம் பிரமமாகிய பரம்—பரமாகிய ஞானாகாசம் காணப்பட்ட இடத்து—அடையப்பட்ட இடத்து பார் முதற் பூதமாகிய அசுத்தம்—போலி அதனுள் மறைந்துவிடும் என்க. அசுத்த பௌதிகமாகிய முன்னிலையே — அசுத்த சரீரமே—சரீர பாவனையே ஈசுவரனை மறைத்துக் கொண்டு இருப்பது. இத்தகைய சரீர பாவனையாகிய தடிப்பு—முன்னிலைச் சுட்டு நீங்கவேண்டும். இவ் அசுத்த சரீரம் மாற்றமடைய வேண்டும்—அமலம்பெற வேண்டும். அப்பொழுதுதான் பிரம சொரூபம் காணப்படும் — சிவதரிசனம் உளதாகும் என்பது திண்ணம். தத்துவப் பெரியார் துணிபும் வேத முடிபும் இதுவே என அறிதற்பாற்று.]

## நன்கொடை

"வித்தகம்" எனும் எமது பத்திரிகைக்கு மனமுவந்து நன்கொடையாக ரூபா மூன்று அளித்த (Colombo, Medical Department Dr. M. V. P. Pieris) (கொளும்பு, மருந்து இலாக்கா, திருவாளர் டாக்டர். எம். வீ. பி. பீறிஸ் அவர்களுக்கு எமது மனமார்ந்த வணக்கம் என்றும் உரிமையாகற்பாலது.

[ப–ர்]

## பட்டினத்தடிகள்

"..........
நுரையுந் திரையும் நொட்புறு கொட்பும்
வரையில் சீகாவாரியும் குரை கடற்
பெருத்துஞ் சிறுத்தும் பிறங்குவ தோன்றி
யெண்ணிலவாகி யிருங்கடலடங்கும்
தன்மை போலச் சராசர மனைத்தும்

நின்னிடைத் தோன்றி நின்னிடை யடங்
[கும் நீ
ஒன்றினும் தோன்றாய் ஒன்றினும் அடங்
[காய்
......................................................"

(கோயில் நான் மணிமாலை)

"......................................................
யாவையு மெனக்குப் பொய்யெனத்
[தோன்றி
மேவரு நீயே மெய்யெனத் தோன்றினை
ஓவியப் புலவன் சாயல்பெற எழுதிய
சிற்பவிகற்ப மெல்லாம் ஒன்றித்
தவிராது தடவினர் தமக்குச்
சுவராய்த் தோன்றும் துணிபு போன்ற
[னவே

(திருக்கழுமலமும்மணிக்கோவை)

"......................................................நின்
தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்த
[லின்
மாயப் படலங் கிறித்தூய
ஞான நாட்டம் பெற்றபின் யானும்
நின் பெருந்தன்மையுங் கண்டேன் காண்
[டலும்
என்னையும் கண்டேன் பிறரையும் கண்
[டேன்
நின்னிலை அனைத்தையும் கண்டேன்
[என்னே
நின்னைக் காணுமாந்தர்
தன்னையுங் காணாத் தன்மையோரே"
(திருவிடைமருதூர்மும்மணிக்கோவை)

வியாபகமாகிய பிரபஞ்சம் தோன்றி ஒடுங்குதற்குரிய நிலைக்களமாகிய வியாப்பியப பிரமமே என்பதும், சுவரில் காணப்படும் சற்பனையாகிய சித்திரம் அச்சுவரின் வேறாகாமைபோல பிரமத்தில் கற்பிக்கப்பட்ட பிரபஞ்சம் அப்பிரமமே யன்றி வேறல்ல என்பதும் திருவருட் சகாயத்தால் ஞான நாட்டம் பெறுதலாற்றான் இவ்வுண்மை அநுபவமாக அறியப்படும் என்பதும் இவற்றால் நன்று வலியுறுத்தப்பட்டன.

சுத்த சாதகம்

சச்சிதானந்தபரசிவமே
தனது தன்னிலையிலேநிற்க
அச்சிதானந்தலீலையினாலே
யனேகமாய்ச்சராசரமாகிச்
சச்சிதானந்தமேயுடல்பொறிகட்குக்
காரணங்களாய்க்கொண்டே
அச்சிதானந்தலீலையினடித்து
மடைந்திடும்பண்டையபடியே.

["அச் சித் ஆனந்தலீலையில்தானே அநேகமாய்ச் சராசரமாகி" என்பதில் "சித்" என்றது சத்தியை. சத்தியின் ஆனந்த லீலையால் நிறைபேத முண்டாகி அதனால் வியாபகமாகிய பிரபஞ்சம் உளதாயிற்று என்க. இச் சக்தி அளவிறந்த கோடி அம்சமுடையாது. இவ் அம்சங்களுள் எத்தனையோ கோடியில் ஒன்று பக்குவம் பெற்று அமலமடைந்து வியாப்பியத்தை அடையும் என்க. பதி பசு பாச இயல்பு இந்நூலில் இயற்கை முறையாக நன்று விளக்கப்பட்டுள்ளது. ஆங்குக் காண்க]

## சித்தாந்தசிகாமணி

கயிற்றர விப்பிவெள்ளிகுற்றியிற்கள்வன்
[மிக்க
வெயிற்படுகானற்றெண்ணீர் விண்ணிற்க
[ந்தருவவூர்போல்
பயிர்ப்பு றுநித்தசச்சிதானந்தசிவத்தின்
[கண்ணே
செயப்படுபொருளாய்த் தோன்றுஞ் செப்
[பிய வுலக மன்றே.

## கூர்மபுராணம்

"ஆதலாற் பிரமமொன்றேநித்தியமலகைத்
[தேரிற்
பேதுறத்தோன்றுநீரிற்பிரபஞ்ச மருண்டு
[தோன்றும்..."

## வாயுபுராணம்

"ரஜ்ஜா வஹிர் மரௌவாரி நீலிமாககநே
[யதா|
அஸத் விச்வமிதம்பாதி யஸ்மிந் அஜ்ஞானகல்
[பிதம்||"

(இ-ள்) கயிற்றில் பாம்பு பாலைநிலத்தில் ஜலத்தோற்றம் (கானல்) ஆகாசத்தில் நீலத்தோற்றம் என்பன எவ்வாறு கற்பனை ஆயினவோ அவ்வாறே அசத்தாகிய இப்பிரபஞ்சம் எதனிடத்தே அஞ்ஞானத்தால் கற்பிக்கப்பட்டுவிளங்குகிறதோ (அதுவே பிரமம் என்பது)

மேலே காட்டிய பிரமாணங்களால் உண்மையில் உள்ளது சத்தாகிய பிரமமே என்பதும் அதுவே வியாப்பியம் என்னும் அதிஷ்ட்டானம் என்பதும் அதனிடத்துக் கற்பிதமாயதே வியாபகமாகிய சராசரப் பிரபஞ்சம் என்பதும் வலியுறுகின்றன. போலி என்னும் பொய் பொய் என்னும் கற்பிதம் அதிஷ்டானத்திலும் அஃதாவது மெய்யினும் வேறன்று. "ரஜ்ஜுரூப அதிஷ்டானத்தின் கண் கற்பிதமாகிய சர்ப்பத்தின் அபாவம் அதிஷ்டானத்தின் வேறன்றாம். மற்றோ அதிஷ்டான ரஜ்ஜுரூபமாம்" (அஃதாவது கயிற்றினிடத்தே பாம்பினது இன்மை அக் கயிறே யன்றி வேறல்ல. கயிறே மயக்க உணர்ச்சியால் பாம்பு போலத் தோன்றியது என்பதாம். கயிற்றைத் தவிரப் பாம்பு எனப் பிறிதொன்று இல்லாமை போலப் பிரமத்தை தவிரச் சராசரப் பிரபஞ்சம் எனப் பிறிதொன்று இல்லை என்பது கருத்து.)

"நேஹநா நாஸ்தி கிஞ்சந"

(ந இஹ நா நா அஸ்தி கிஞ்சன = இவ்வுலகத்தில் அநேகம் என்பது சிறிதேனும் இல்லை; ஆனால் பிரமம் ஒன்றே இருக்கிறது) என்னும் சுருதிப்படி" அதிஷ்டான ஆன்மா (பரமான்மா) வின் கண் சிறிது மாத்திரையும் துவைதப் பிரபஞ்சம் இன்றாம், மற்றோ அதிஷ்டான ஆன்மரூபமாம். கடம்படம் என்பனவாதி ஞானங்களும் ஸ்வயப் பிரகாச ரூபங்களாம்—பேதமற்றனவாம்—என்பது "வேதாந்த" நூற்கொள்கை. இது போலவே பாசமே ஞானமாகிப் பயன்படும்—அருளாகும் என்று "சித்தாந்த" நூலும் கூறுகின்றது. பாசம் என்பது பொய்–இருள்-அழுக்கு-தோன்றித் திரியும் தன்மையுடையது எனப்படும். திரியும் என்றபோதே மறையும் என்பது பெறப்பட்டது. இதனாற்றான் பிரபஞ்சம் அநித்தியம் எனப்படுவது. தோன்றல் திரிதல் என்பனவே பிறப்பும் இறப்

பும் ஆம். இதனுல் லௌகிகம் வேறு பாரமார்த்திகம் வேறன்று என்பதும், தோன்றல் திரிதல் அஃதாவது இறத்தல் பிறத்தல் என்பன வாய்மையே யன்றிப் பொய்யல்ல என்பதும் பெறப்படுகின்றன. “வேதாந்தி” களும் “சித்தாந்தி” களும் இவ்வாறே கூறிக் கதறுகின்றனர். இது உண்மைதான் எது உண்மை? நூல்கள் கூறுவது உண்மை. உலகோர் உணர்ந்தது திரிபு. தோன்றும் வஸ்து கர்மாநுசாரமாகத் திரிந்து பிறக்கும். அன்றி இவர் கூறுவது போல அழிந்து போவது பொருளல்ல. செத்துப்போவது என்பதற்கும் மறைதல் என்பதற்கும் பொருளால் வேறுபாடு மிக உண்டு. இதனை அறியாமல் அவ் அறியாமைக்கு எற்பப் பொருள் கூறி மாழ்கின்றனர்; பின் மாள்கின்றனர்.

பசு பாசமாகிய வியாபகமும் பதியாகிய வியாப்பியமும் வேறு வேறு அல்ல. ஆதலின் ஒன்றே எனக் கூறலாமோ எனின், ஒன்றுமல்ல. இரண்டே எனின் இரண்டுமல்ல. ஒன்றும் தான். இரண்டும் தான். இதனைத் தான் அவாச்சியம் அவாங்மன கோசரம் என்பது- சொல்லவும் நினைக்கவும் எட்டாததென்பது. உரை உணர்வுக்கு எட்டாத ஒன்றை அறிவது எப்படி? உரிய சாதகங்களால் தான் அது ஆம் பெற்றி கைகூடி அமையப் பெறுவதேயன்றிப் பிறவாறு சுட்டி அறிந்து கூறுதல் அசாத்தியமேயாகும். பின் வரும்பிரமாணங்கள் இவ்வுண்மையை நன்று வலியுறுத்துகின்றன.

## சடகோபர்

அருள்தான் இனியா னறியேன் அவனெ
[ன்னுள்
இருள்தானறவீற்றிருந்தான் இதுவல்லால்
பொருள் தானெனின் மூவுலகும் பொரு
[ளல்ல
மருள்தா னீதோ மாய மயக்கு மயக்கே.

## திருமந்திரம்

உரையற்ற தொன்றை யுரைசெய்யு மூட
[ர்காள்
கரையற்ற தொன்றைக் கரைகாண லாகு
[மோ
திரையற்ற நீர்போற் சிந்தை தெளிவார்
[க்குப்
புரையற்றிருந்தான் புரிசடை யோனே.

(ஷை 9-ம் தந். வரைவுரை மாட்சி. செ,2)

“ஐயன் வந்து மெய்யகம் புகுந்து
கோயில் (கொண்டபின்)
வையகத்தில் மாந்தர் முன்பு வாய்திற
ப்ப தில்லையே.

என்றனர் சிவவாக்கியர். “புரையற்று இருந்தான் புரிசடையோனே” என்பதன் பொருள்-தான் அது ஆம் தத்துவம் இதுவே என அறிக.

## கம்பராமாயணம்.

ஒன்றே என்னின் ஒன்றேயாம் பல என்று
[ரைக்கிற் பலவேயாம்
அன்றே என்னின் அன்றேயாம் ஆம் என்
[றுரைக்கின் ஆமேயாம்
இன்றே என்னின் இன்றேயாம் உளதென்
[றுரைக்கின் உளதேயாம்
நன்றே நம்பி குடிவாழ்க்கை நமக்கிங்கென்
[னே பிழைப்பம்மா.

(ஷை யுத்தகாண்டம் செ. 1)

என அறிஞர் பெருமானாகிய கம்பர் கூறியதும் அறிக. இவ்வாசிரியர் அரிய பெரிய தமிழ் மறையாகிய நாலாயிரப் பிரபந்த உண்மைகளை நன்குணர்ந்தவர் என்பது அரும்பொருள் பொதிந்த இவர் கவிகளால்நன்று வலியுறுகின்றது. அமயம் நேர்ந்துழி இவைகள் எடுத்துக் காட்டி விளக்கப்படும். சிலை உருவான சிற்பத்தைப் பெ வாய்மை என மயங்கித் தன்னை மறந்து செயலற்று நிற்கும் ஒருவன் அதனைச்சிலை என உணர்ந்து மயக்கம் தெளிய மாட்டாமைபோல, காரியமாகிய மாயாப் பிரபஞ்சத்தில் மயங்கி நிற்கும் நாம் அதற்குக்காரணமாய் நிற்கும் பரம் பொருளை அறிந்து அமைதி பெறுதல் முடியாத காரியமே. முன்னிலையாகிய போலியின் இயல்பை அறிதற்கு நம்முள் அருளோதயம் ஆகல் வேண்டும். அப்பொழுது தான் பதி பசு பாச இயல்பு வெட்ட வெளிச்சமாகும். இது பற்றியே “சாணைகத்துள்ளே அழுந்திய மாணிக்கம் காணுமளவுங் கருத்தறி வாரில்லை” (திருமந்திரம்) என அருளிச் செய்தார் எம் அண்ணல் திருமூலர். இவ் உண்மை “அருளோதயம்” என்னும் கட்டுரையில் விளக்கிக் கூறப்பட்டது. (“வித்தகம்” இல 31) ஆங்குக்காண்க.

அங்கலிங்க ஐக்கியம் எனப்படும் தத்துவமசி மகாவாக்கியப் பொருளாகிய உண்மைச் சைவ முத்திநிலை வற்புறுத்தும் சிவாத்வைத சித்தாந்தமே வேதாகம முடிபு எனப்படும். பின் வரும் வாதுளாகம வசனம் சிவாத்வைத உண்மையை நன்று வலியுறுத்துகின்றது.

“ஏகமே வாத் விதீபம்யநவிகல்பம் பரம்
பதம் தத்வீரசைவமித் யுத்தம் ||”

விகற்பம் இல்லாததும் இரண்டில்லாமல் ஒன்றேயாகவும் இருக்கின்றது எதுவோ அத்தகைய பரமபதமான சிவாத்வைத ஞானம் வீரசைவம் என்று கூறப்படும் என்பது இதன் பொருளாகும். சிவாத்துவிதமே ஆகமாந்தம் எனவும், சிவ சித்தாந்தம் எனவும், வைதிக மகா பசுபதம் எனவும், சைவ சித்தாந்தம் எனவும் வீரசைவம் எனவும் பெரியோரால் வழங்கப்பட்டது. இதனை இரகசியம் எனவும் சிவஞானம் எனவும் மறை பொருளுள்ளும் மறைபொருள் எனவும் வாதுளம் வற்புறுத்து ஓதுகின்றது. இதுவே அநாதியாய் உள்ளது என்ப. பின்வரும் வியாச சூத்திரமும் சிவாத்வைத உண்மையையே நன்று வலியுறுத்துகின்றது.

“அம்சோ நா நா வ்யபதே சாத்”

சிவனுடைய அம்சங்களே அநாதியான மாயையின் பந்தத்தினுல் ஜீவர் என்னும் நாம ரூபங்களை அடைந்து பலப் பல சாதி பேதமாய் விளங்கும் என்பது இதன் பொருளாகும். மேலும் விரிப்பிற் பெருகும்.

காரண காரியம் என்னும் தத்துவங்களில் உலகம் காரியத்தில் காரியம்-

காரியத்தில் காரியத்தினாலன்றி வேறு ஒன்றினாலும் காரியத்தை அறிய முடியாது. காரியத்தை அறிந்த பின் காரணம் தானே விளங்கும் "தன்னை அறிந்தால் தலைவனை அறியலாம்" என்பதன் உண்மை இதுவே என்க. போலியைக் கொண்டுதான் வாய்மையை அறியவேண்டும் "ஸர்வம் பிரமமயம்" என்னும் வேத உண்மைக்கு ஏற்ப தேகாதிப் பிரபஞ்சம் எல்லாம் கற்பனை எனப்படுதலால் அக்கற்பனைகள் என்னும் பிரமத்தை நிறைமுறையோடு உண்டே பிரமத்தை அடைய வேண்டும்— பிரமமாகவேண்டும். அப்பொழுதுதான் "தத் தொம் அசி" வாக்கியம் சித்திக்கும்; அன்றேல்வேறு தடம் யாண்டுளது? தன்னிலை முன்னிலைகள் ஒருங்கே அமலம் பெற வேண்டும். இதனாற்றான் "ஸர்வம் பிரமமயம்" என்னும் அநுபவம் வாய்மையாகும். உடலுயிராகிய தன்னிலை அமலமடைந்து காரணத்தில் ஒடுங்கி நித்தியத்துவம் அடையும். மீண்டு வாரா உண்மை முத்தி உளதாகும் என்க. இவ்வாறு அநித்தியமாகத் தோன்றுவதை நித்தியப்படுத்த அறியாது—பிரமமாக்க அறியாது—உண்மைச் சைவ முத்தி நிலையை அறியாது —அதனை அடையப்பெறாது சாதலடைந்ததும் — சாதலடைவதுமே உலகியலாயிற்று. பழுதையைப் பாம்பல்ல பழுதைதான் எனக் கூறத் தொடங்கியவன் அப் பழுதையைக் கண்டதும் அதனைப் பாம்பென மயங்கி அஞ்சி ஓடியதுபோல, "ஸர்வம் ப்ரஹ்மமயம்" என்னும் வேத உண்மையை விளக்க முன்வந்தவர் பலர் அதற்கு ஒத்த அநுபவம் இன்மையால் அவ் உண்மையை ஐயம் திரிபின்றிக் கடைபோக விளக்கவும் முடியாது உண்மை நிலையை அடையவும் முடியாது மாயை என்னும்நச்சரவுக்கு இரையாகி மாண்டு போயினர் என்பதே உண்மையாயிற்று. இன்ன நீர்மையராற்றான் பன்னெடுங்காலமாக உண்மை மறை பொருளாயிற்று என்பது மிகையன்று.

இது காறும் கூறியவைகளால் வியாப்பிய வியாபகங்களாய் காரண காரியமாய் அமைந்த பதி பசு பாச உண்மைகளின் இயல்பு ஒருவாறு உணரத்தகும்.

சுபம்.

## வெண்பா.

திருமந்தி ரத்திற்குந் திருவாசக கத்திற்கும்
அருமை பெறுந் தெள்ளுரை யொன்றுய்ந்தே—வரிவரியாய்
வெளியிட்டா லின்று விழிப்புறுவர் நந்தமிழர்
ஒளியுடலி னுண்மை யுணர்ந்து.

அங்கலிங்க மொன்றி யகரவடி வாய்மறையுந்
துங்கமிக முத்திநிலை சொல்லுதற்கே—சங்கையறு
சுத்தசிவ ஞானச் சுடரா யெழுந்த தமிழ்
வித்தகனே வேறூர் விளம்பு.

[சு. பா.]

சுத்தசாதகம் விலை அணா 2.
திருவாசக உண்மை
விலை அணா 2.
நந்தி வெளியீட்டு மன்றம்
புதுவை.

## அறிவிப்பு

கடிதர்களின் அபிப்பிராயங்களுக்கு அவர்களே பொறுப்பாளிகள்.

## பழைய பிரதிகளின் கிரயம்

1-வது நெம்பர் தனிப்பிரதி விலை அணா 4.
2—வது ,, ,, ,, 4.
3-வது முதல் 20—வது வரையில் பிரதி ஒன்றுக்கு விலை அணா 2

வேண்டுவோர் தபால் முத்திரை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

வித்தகம் ஆபீஸ்
புதுவை

## "வித்தகம்"

வருடசந்தா
முன்பணம்

இந்தியா, பர்மா, சிலோன் ரூ. 3—0—0
மலாயா, சிங்கப்பூர் சைகோன் } ரூ. 4-0-0

வித்தக நிலையம்,
புதுச்சேரி.

## "வித்தகம்"

விளம்பர விகிதம்

வியாபார விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 0—8—0
கோர்ட்டு விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 1—0—0

☞ நீடித்த விளம்பரங்களுக்கு தனி விகிதம்.

வித்தக நிலையம்,
புதுச்சேரி.

Sandhanam Printing Works, Pondicherry Le Gérant, R. Nagarattinam